*பிரசார் பாரதி*
*அகில இந்திய வானொலி, சென்னை-4*
*29 01 2026 THURSDAY  12 40 PM*
*ஆகாஷவாணி - செய்திகள்*

*தலைப்புச் செய்திகள்*

- *ஐரோப்பிய யூனியன் உடனான தடையற்ற வர்த்தக ஒப்பந்தம், இளையோர், விவசாயிகள் மற்றும் உற்பத்தி துறையினருக்கு எண்ணற்ற வாய்ப்புகளை வழங்கும் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.*

- *மத்திய நிதியமைச்சர் திருமதி. நிர்மலா சீதாராமன், பொருளாதார ஆய்வறிக்கையை மக்களவையில் இன்று தாக்கல் செய்தார்.*

- *விமான விபத்தில் உயிரிழந்த மஹாராஷ்ட்ர துணை முதலமைச்சர் அஜித் பவாரின் இறுதிச் சடங்குகள் இன்று பாராமதியில் நடைபெற்றன.*

- *பல்கலைக் கழக மானியக் குழுவின் உயர்கல்வி நிறுவனங்களின் சமத்துவ ஊக்குவிப்பிற்கான நெறிமுறைகள் வரவேற்கத்தக்கது என்று தமிழக முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் கூறியுள்ளார்.*

- *ஜெர்மன் மாஸ்டர்ஸ் ஸ்னூக்கர் சாம்பியன் போட்டியில் இந்தியாவின் Ishpreet Chadha காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.*

*>>>>>>><<<<<<<*

*நாடாளுமன்றத்தின் நடப்பு பட்ஜெட் கூட்டத்தொடர் ஆக்கபூர்வமாக அமையும் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி நம்பிக்கை தெரிவித்துள்ளார்.*

*நாடாளுமன்ற வளாகத்தில் செய்தியாளர்களிடம் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.*

*(சவுண்ட் பைட் - பிரதமர் 73 செகண்ட்ஸ்)*

*இதுவரை இல்லாத அளவிற்கான வேகத்தில் சீர்திருத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக அவர் தெரிவித்தார்.*

ஐரோப்பிய யூனியன் உடனாக தடையற்ற வர்த்தக ஒப்பந்தம், இளையோர், விவசாயிகள் மற்றும் உற்பத்தி துறையினருக்கு எண்ணற்ற வாய்ப்புகளை வழங்கும் என்று திரு. நரேந்திர மோடி கூறினார்.

>>>>>>><<<<<<<

இதற்கிடையே, ஐரோப்பிய யூனியன் உடனான தடையற்ற வர்த்தக ஒப்பந்தம் குறித்து காங்கிரஸ் மூத்த தலைவர்களில் ஒருவரான திரு. ஜெய்ராம் ரமேஷ் கூறியுள்ள குற்றச்சாட்டுகள் தவறானவை என்று மத்திய தொழில் மற்றும் வர்த்தகத்துறை அமைச்சர் திரு. பியூஷ் கோயல் கூறியுள்ளார்.

சமூகவலைதளத்தில் இதனை தெரிவித்துள்ள அவர், இந்த ஒப்பந்தம் பரஸ்பரம் பயனளிக்கக்கூடியது என்று குறிப்பிட்டுள்ளார்.

காங்கிரஸ் ஆட்சிப் பொறுப்பில் இருந்த போது, உரிய நேரத்தில் எந்த முடிவும் மேற்கொள்ளப்படவில்லை என்று அவர் அதில் குற்றம் சாட்டியுள்ளார்.

இந்த ஒப்பந்தம் நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு மேலும் உத்வேகம் அளிக்கும் என்றும் திரு. பியூஷ் கோயல் கூறியுள்ளார்.

>>>>>>><<<<<<<

நாடாளுமன்றத்தின் பட்ஜெட் கூட்டத்தொடரில் ஆக்கபூர்வமாக விவாதங்கள் நடைபெறுவதை உறுப்பினர்கள் உறுதி செய்ய வேண்டும் என்று மாநிலங்களவைத் தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் கேட்டுக் கொண்டுள்ளார்.

இன்று மாநிலங்களவையில் தொடக்கவுரையாற்றிய அவர், விரைவான பொருளாதார வளர்ச்சியை கண்டுவரும் நாடாக இந்தியா திகழ்வதாக குறிப்பிட்டார்.

உலகின் 3வது பெரிய பொருளாதார நாடாக இந்தியா விரைவில் உருவெடுக்கும் என்றும் திரு. சி.பி. ராதாகிருஷணன் கூறினார்.

>>>>>>><<<<<<<

நடப்பு நிதியாண்டிற்கான பொருளாதார ஆய்வறிக்கையை மத்திய நிதியமைச்சர் திருமதி. நிர்மலா சீதாராமன், இன்று மக்களவையில் தாக்கல் செய்தார்.

இதனை தொடர்ந்து அவை நடவடிக்கைகள் ஒத்தி வைக்கப்பட்டன.

*வரும் நிதியாண்டிற்கான பட்ஜெட்டை வரும் ஞாயிற்றுக்கிழமை திருமதி. நிர்மலா சீதாராமன் தாக்கல் செய்கிறார்.*

*>>>>>>><<<<<<<*

*நாடுமுழுவதும் 30 கோடிக்கும் மேற்பட்ட சமையல் எரிவாயு இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளதாக பெட்ரோலியத்துறை அமைச்சர் திரு. ஹர்தீப்சிங் புரி கூறியுள்ளார்.*

*சமூகவலைதளத்தில் இக்கருத்தை பதிவு செய்துள்ள அவர், அனைத்து குடியிருப்புகளுக்கும் குறைந்த செலவில் சமையல் எரிவாயு கிடைக்க வேண்டும் என்ற நோக்கில், பிரதமர் திரு. நரேந்திர மோடி உறுதியான நடவடிக்கைகளை மேற்கொண்டதாக கூறியுள்ளார்.*

*இதன் காரணமாக, சமையல் எரிவாயு பயன்படுத்துவோரின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாகவும் திரு. ஹர்தீப்சிங் புரி தெரிவித்துள்ளார்.*

*>>>>>>><<<<<<<*

*விமான விபத்தில் உயிரிழந்த மஹாராஷ்ட்ர மாநில துணை முதலமைச்சர் அஜித் பவாரின் இறுதிச் சடங்குகள், முழு அரசு மரியாதையுடன் இன்று Baramati-ல் நடைபெற்றன.*

*மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா, பிஜேபி தலைவர் திரு. நிதின் நபின் உட்பட தலைவர்கள் பலர் இதில் பங்கேற்றனர்.*

*இதற்கிடையே, விமான விபத்து தொடர்பான விசாரணை தீவிரமடைந்துள்ளதாக சிவில் விமான போக்குவரத்து துறை தெரிவித்துள்ளது.*

*அந்த விமானத்தின் கறுப்புப் பெட்டியும் கைப்பற்றப்பட்டுள்ளதாக அதன் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.*

*>>>>>>><<<<<<<*

*இந்தியா - அரபு வெளியுறவு அமைச்சர்கள் கூட்டம், புதுதில்லியில் நாளை நடைபெறவுள்ளதாக மத்திய அரசு கூறியுள்ளது.*

*புதுதில்லியில் இதனை செய்தியாளர்களிடம் தெரிவித்த வெளியுறவுத்துறை செயலர் திரு. ரன்தீர் ஜெய்ஸ்வால், சூடான், பாலஸ்தீனம், Comoros ஆகிய நாடுகளின் வெளியுறவு அமைச்சர்கள் இதில் பங்கேற்கவுள்ளதாக கூறினார்.*

இந்தியா – அரபு நாடுகளுக்கு இடையேயான உறவை மேலும் வலுப்படுத்துவதற்கான வழிமுறைகள் குறித்து இக்கூட்டத்தில் விவாதிக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

இதற்காக விரிவான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருப்பதாகவும் திரு. ரன்தீர் ஜெய்ஸ்வால் கூறினார்.

>>>>>>><<<<<<<

மாநில மகளிர் ஆணையங்கள் பங்கேற்கும் இரண்டு நாள் கலந்துரையாடல் அமர்வு, இன்று புதுதில்லியில் தொடங்கியது.

தேசிய மகளிர் ஆணையம் நடத்தும் இந்த கலந்துரையாடல் நிகழ்ச்சியை, தில்லி முதலமைச்சர் திருமதி. ரேகா குப்தா தொடங்கி வைத்தார்.

மகளிருக்கு எதிரான குற்றங்களை தடுப்பதற்கான நடவடிக்கைகள் குறித்து இதில் விரிவாக விவாதிக்கப்படவுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

>>>>>>><<<<<<<

பல்கலைக் கழக மானியக் குழுவின் உயர்கல்வி நிறுவனங்களின் சமத்துவ ஊக்குவிப்பிற்கான நெறிமுறைகள் வரவேற்கத்தக்கது என்று முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் கூறியுள்ளார்.

சமூகவலைதளத்தில் இக்கருத்தை பதிவு செய்துள்ள அவர், சாதிய பாகுபாட்டை ஒழிப்பதும், பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு பாதுகாப்பு வழங்கப்பட்டிருப்பதும் ஆதரிக்கத்தக்கது என்று குறிப்பிட்டுள்ளார்.

>>>>>>><<<<<<<

கேரள அரசின் வரும் நிதியாண்டிற்கான பட்ஜெட் அம்மாநில சட்டப்பேரவையில் இன்று தாக்கல் செய்யப்பட்டது.

நிதியமைச்சர் திரு. கே.என். பாலகோபால், பட்ஜெட்டை தாக்கல் செய்து உரையாற்றினார்.

மகளிருக்கான சமூக பாதுகாப்பு ஓய்வூதிய திட்டத்திற்காக 3 ஆயிரத்து 820 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டிருப்பதாக அவர் தெரிவித்தார்.

சட்டப்பேரவை தேர்தல் நடைபெறவுள்ள நிலையில், வழக்கத்திற்கு மாறாக முழு பட்ஜெட் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

>>>>>>><<<<<<<

உத்ராகண்டில் வேளாண் துறையின் செயல்பாடுகள் குறித்து அம்மாநில முதலமைச்சர் திரு. புஷ்கர்சிங் தாமி இன்று அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்தினார்.

டேராடூனில் நடைபெற்ற இந்த ஆய்வுக் கூட்டத்தில், சிறுதானியம் மற்றும் ஆப்பிள் இயக்கத்தின் செயல்பாடுகள் குறித்து முதலமைச்சர் விரிவாக கேட்டறிந்ததாக ஏஜென்ஸி செய்திகள் தெரிவிக்கின்றன.

>>>>>>><<<<<<<

மிஸோரமில் புத்தொழில் நிறுவனங்களுக்கு ஊக்கமளிக்கப்பட்டு வருவதாக அம்மாநில முதலமைச்சர் திரு. *Lalduhoma* தெரிவித்துள்ளார்.

*Aizawl*-ல் நடைபெற்ற நிகழ்ச்சியில், இதுதொடர்பான இரண்டு திட்டங்களை தொடங்கி வைத்துப் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

புத்தொழில் நிறுவனங்களின் முதலீட்டுக்கான நிதியம் தொடங்கப்பட்டிருப்பதையும் அவர் சுட்டிக்காட்டினார்.

இதனை முதலீட்டாளர்கள் முழுமையாக பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்றும் திரு. *Lalduhoma* கேட்டுக் கொண்டார்.

>>>>>>><<<<<<<

மணிப்பூரில் இரண்டு தீவிரவாதிகளை பாதுகாப்பு படையினர் கைது செய்தனர்.

மேற்கு இம்பால் மாவட்டத்திற்கு உட்பட்ட *Thangmaiband* பகுதியில் பாதுகாப்புப் படையினர் தேடுதல் வேட்டையில் ஈடுபட்டிருந்தபோது, இவர்கள் கைது செய்யப்பட்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

>>>>>>><<<<<<<

ராஜஸ்தானில் நேரிட்ட சாலை விபத்தில் 4 பேர் உயிரிழந்தனர், 5 பேர் காயமடைந்தனர்.

*Ludhawa* – பகுதியில் சென்று கொண்டிருந்த பேருந்து லாரி மீது மோதியதில் இந்த விபத்து நேரிட்டதாக காவல்துறையினர் தெரிவித்தனர்.

>>>>>>><<<<<<<

ஜெர்மன் மாஸ்டர்ஸ் ஸ்னூக்கர் சாம்பியன் போட்டியில் இந்தியாவின் Ishpreet Chadha காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

இப்போட்டியின் முதல் இரண்டு ஆட்டங்களில் வெற்றிபெற்று அவர், காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு தகுதி பெற்றார்.

>>>>>>><<<<<<<

அமெரிக்காவில் நடைபெற்று வரும் சர்வதேச ஸ்குவாஷ் போட்டியில், இந்தியாவின் வேலவன் செந்தில்குமார் மற்றும் Veer Chotrani காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளனர்.

ஆடவர் ஒற்றையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில், வேலவன் செந்தில்குமார், இங்கிலாந்தின் Tom Walsh-ஐ வென்றார்.

மற்றொரு ஆட்டத்தில், Veer Chotrani, பிரான்ஸின் Balazs Farkas-ஐ வென்றார்.

>>>>>>><<<<<<<

ஆஸ்திரேலிய ஓப்பன் டென்னிஸ் போட்டியின், 14 வயதுக்கு உட்பட்டோருக்கான பிரிவில், இந்தியாவின் Jensi Kanabar அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

>>>>>>><<<<<<<